
தேவன் இந்த பூமியில்
எழுந்தருளும்போது

தேவன் இந்த பூமியில் எழுந்தருளும்போது   TUE 24 APR '07

68 சங்கீதம்

தேவன் இந்த பூமியில் எழுந்தருளும்போது
அவருடைய சத்துருக்கள் சிதறிப் போவார்கள்
தேவனைப் பகைக்கிறவர்கள் ஓடிப்போவார்கள்
புகை பறக்கடிக்கப் படுவதுபோல பறந்துபோவார்கள்

துரத்தும் துரத்தும் துரத்தும் தேவனே
சத்துருக்கள் யாவரையும் துரத்தும் தேவனே

அக்கினிக்கு முன் மெழுகு உருகுவதுபோல
துன்மார்க்கர் தேவனுக்கு முன் அழிந்து போவார்கள்
திக்கற்ற பிள்ளைகளுக்கு தகப்பனாய் இருக்கிறார்
விதவைகளுக்கு நியாயத்தை விசாரிக்கின்றார்

செய்திடும் செய்திடும் செய்திடும் தேவனே
ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் நியாயத்தை செய்திடும்

தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசலை தந்திடுவார்
கட்டுண்டவர்களை கர்த்தரே விடுதலையாக்கிறார்
துரோகிகளை வறண்ட நிலத்தில் தங்கச் செய்திடுவார்
நீதிமான்களோ தேவனுக்கு முன்பாக மகிழ்ந்து களிகூருவர்

தந்திடும் தந்திடும் தந்திடும் தேவனே
வீடுவாசலும் விடுதலையும் தந்திடும் தேவனே


When God Arises in This Earth